# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில்
## 28.05.2010 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸூர் சூரா ஸாது -ன் 72 முதல் 75 வரையுள்ள வசனங்களை ஓதினார்கள்:**

**பொருள் : உமது இறைவன் வானவர்களிடம் இவ்வாறு கூறிய போது (நிகழ்ந்ததை நினைத்துப் பார்ப்பீராக): நான் களிமண்ணிலிருந்து ஒரு மனிதனைப் படைக்கவிருக்கிறேன்.**

**எனவே நான் அவனை முழுமையாக்கி அவனுள் என் ஆவியை ஊதினால் நீங்கள் யாவரும் அவனுக்குக் கட்டுப்பட்டவர்களாக (அல்லாஹ்வின் முன்) சிரம் பணியுங்கள்.**

**எனவே வானவர்கள் எல்லாருமே கீழ்ப்படிந்தனர். ஆனால் இப்லீஸ் (கீழ்ப்படியவில்லை). அவன் கர்வம் கொண்டு, நிராகரித்தவர்களைச் சேர்ந்தவனாகி விட்டான். (38:72-75)**

உலகம் படைக்கப்பட்டது முதல் ஷய்த்தானுக்கும் மனிதனுக்கும் சண்டை ஆரம்பமாகி விட்டது. மார்க்க வரலாறை நாம் பார்க்கிறோம். ஹஸ்ரத் ஆதம் (அலை) அவர்கள் மீது இறைவனின் அன்பிற்குரிய பார்வை விழுந்ததுமே ஷய்த்தான் அவருடன் சண்டைபோடத் தொடங்கி விட்டான். மிகக் கடுமையாக போர்ப்பிரகடனம் செய்தான். பிறகு ஒவ்வொரு காலத்திலும் இந்த வரலாறு தொடர்ந்தது; தொடர்ந்து கொண்டிருக்கிறது.

நபிமார்கள் உலகிற்கு வந்து மனிதனை இறைவன் பக்கம் கொண்டு செல்லும் வழியைக் காட்டுகின்றனர். ஷய்த்தான் வழிதவறச் செய்ய முயற்சி செய்கின்றான். முதலிலும் அவ்வாறே செய்தான். இப்போதும் அவ்வாறே செய்து வருகின்றான். பொறாமை, காழ்ப்புணர்ச்சி, பேராசை, பயம் மூலமாக அச்சுறுத்துகின்றான். வழிகேட்டின் பக்கம் எடுத்துச் செல்கிறான்.

திருக்குர்ஆனின் எண்ணற்ற இடங்களில் இதுபற்றி வருகிறது. திருக்குர்ஆனில் சூரா ஃபாத்திஹாவிலிருந்து சூரத்துன்னாஸ் வரை ஷய்த்தானின் தாக்குதல்களைக் குறித்து எச்சரிக்கின்றான். அதிலிருந்து தப்பிக்குமாறு கட்டளையிட்டுள்ளான். அதற்காக துஆவும் கற்றுத் தந்துள்ளான்.

அல்லாஹ்வே! சபிக்கப்பட்ட ஷய்த்தானின் தாக்குதல்களிலிருந்து காப்பாற்றுவாயாக! எப்போதும் எம்மை உனது அடைக்கலத்தில் வைப்பாயாக!

நான் ஓதிய வசனத்தில் மனிதனை அவனது பிறப்புடன் சேர்த்து தனது அன்பிற்குரியவனாகவும், நெருக்கத்தைப் பெற்றவனாகவும் அறிவித்தான். மலக்குகளை மனிதனுக்கு முழுமையாக கட்டுப்படுமாறு கட்டளையிட்டான்.

ஷய்த்தான் மிகவும் பெருமை மற்றும் ஆணவம் கொண்டவாறு கூறினான்.

மண்ணால் படைத்த மனிதனுக்கு ஸஜ்தா செய்வதா? நான் எனக்குள் நெருப்பின் தன்மையைக் கொண்டுள்ளேன்.

அல்லாஹ் மனிதனைப் படைத்து இறைபண்பைப் பெற்று இறை நெருக்கத்தின் உயர் தகுதியை பெறுவதற்கான ஆற்றலையும் அவனுக்குள் வைத்தான். மலக்குகளும் இறைவனால் நியமிக்கப்பட்டவருக்கு இறைவன் புறமிருந்து பணி செய்வதற்காக பணிக்கப்பட்டுள்ளனர். அல்லாஹ் தனது நபிமார்களை அனுப்புகின்றான். எல்லாரையும் விட அதிகமாக அந்த நபிமார்கள் இறைநெருக்கத்தைப் பெறுகின்றனர். அவர்கள் இறைவனது வஹி, ரூஹுல் குதுஸ் (பரிசுத்த ஆவி) -ல் இருந்து பங்கு பெறுபவர்களாக

இருக்கின்றனர். எல்லா மலக்குகளின் அமைப்பும் அவருக்கு ஆதரவாக நிற்கின்றன. அவர்கள் எந்த நோக்கத்திற்காக வந்தார்களோ அந்த நோக்கத்தின் பக்கம் எடுத்துச் செல்கின்றனர். அல்லாஹ்வின் சிறப்பான ஒரு தக்தீர் அங்கு செயல்படுகிறது. சில இடங்களில் அல்லாஹ் மனிதன் என்ற சொல்லை பயன்படுத்தியும் இன்னும் சில இடங்களில் **ஆதம்** என்ற சொல் மூலமாகவும், மனிதனை இறைவன் படைப்பினங்களுள் சிறந்த படைப்பினமாக ஆக்கியிருப்பதாகக் கூறியுள்ளான். எல்லா உலகத்தையும் மற்ற படைப்பினங்களையும் அவனுக்கு தொண்டு செய்ய வைத்தான். ஒரு மனிதன் இறைநெருக்கத்தின் தகுதியைப் பெறும் போது தனது காலத்தின் **ஆதம்** ஆகின்றான். அந்த நிலையில் இறைவன் அம்மனிதனுக்கு செய்யும் உதவிகள் மனிதனது கற்பனைக்கு அப்பாற்பட்டதாகும்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மற்றும் முஃமின்களுக்கு வரம்புமீறி அநீதியிழைக்கப்பட்டது.

முஸ்லிம்களை அழித்து விடுவதற்காக மதினாவை தாக்கும் எண்ணத்தில் குஃப்பார்கள் படை திரட்டினர்.

பிறகு பத்ர் மைதானத்தில் ஒன்றுகூடினர். மலக்குகள் மூலமாக அல்லாஹ் எவ்வாறு உதவி செய்து போரின் முடிவை எதிரிகளுக்கு பாதகமாக திருப்பினான்?

ஒவ்வொரு தரப்பிலும் ஜமாஅத் அளவிலும் நாம் இக்காட்சியைக் காண்கிறோம். தனிப்பட்ட முறையிலும் நபிமார்களுடன் இந்த நடைமுறையை காண்கிறோம். பிறகு ஹுனைன் போரிலும் இந்த காட்சியை கண்டோம். இந்த ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அல்லாஹ் முஃமின்களின் ஜமாஅத்திற்கு உதவி செய்தான். இதுபோன்ற சம்பவங்கள் இஸ்லாமிய வரலாற்றில் எண்ணற்று காணப்படுகின்றன. முஸ்லிம்களின் ஆரம்ப நிலையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலத்தில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடன் மலக்குகளின் படை இருந்தது. முஸ்லிம்களுக்கும் உயிர்சேதங்கள் ஏற்படவே செய்தன. பொருள் நஷ்டமும் ஏற்பட்டது. ஆனால் இப்லீஸின் கூட்டங்கள் தமது இலக்கைப் பெற முடியவில்லை. ஷய்த்தானின் சீடர்கள் கூச்சலிட்டுக் கொண்டிருந்தனர்.

ஏதாவது ஒரு வகையில் – அல்லது மக்களின் உள்ளங்களில் தீய ஊசலாட்டங்களை ஏற்படுத்தி, சந்தேகங்களில் அவர்களை போட முயன்றனர்; பயமுறுத்தினர்; கொலை செய்வதாக மிரட்டினர்; பொருள் நஷ்டம் ஏற்படுத்தி விடுவதாக மிரட்டினர். மறைமுக தாக்குதல், வெளிப்படையான தாக்குதல் மூலம் மிரட்டினர். ஷய்த்தானின் பிடியில் விழுந்து நபிமார்களை நிராகரிப்பது எல்லாம் எதிரிகளுக்கு அவர் தம் தற்பெருமையினால் ஏற்படுகின்றன. தற்பெருமை அவர்களை நன்மையின் பக்கம் அடியெடுத்து வைக்க விடுவதில்லை. எப்போதும் அவர்களின் பதில் இவ்வாறு தான் இருந்தது; நுபுவ்வத் வாதம் செய்பவரும் அவரை ஏற்பவரும் ஏழைகளாக இருந்தனர். நாமே செல்வந்தர்களாகவும், அறிவாற்றல் பெற்றவர்களாகவும், மார்க்கத்தைப் பற்றி நன்கு அறிந்தவர்களாகவும் உள்ளோம். எனவே நான் ஏன் இவர்களது ஜமாஅத்தில் சேர்ந்து இவர்களிடம் பைஅத் செய்ய வேண்டும்?

இக்காலத்தில் காலத்தின் இமாமை ஏற்றுக் கொள்ளாமல் இருப்பதற்கும் தற்பெருமையே காரணம். அது அவர்களை ஏற்றுக் கொள்ளாமல் இருக்குமாறு பலவந்தப்படுத்துகிறது.

**அல்லாஹ் மலக்குகளிடம் கூறினான்:**

நான் மனிதனைப் படைத்துள்ளேன்; அவனுக்கு ஸஜ்தா செய்யுங்கள். இது வெளிப்படையான ஸஜ்தா அல்ல. வெளிப்படையான ஸஜ்தா இறைவனுக்கு செய்யப்படுகிறது. இதன் பொருள் உலகில் மார்க்கத்தை பரப்புவதற்காக நான் ஒருவரை எழுப்பும்போது அவருக்கு முழுமையாகக் கட்டுப்பட்டவாறு அவரது மிஷனை வளர்ச்சி அடையச் செய்வதில் உதவி செய்யுங்கள். ஷய்த்தானுடைய தாக்குதல்களுக்கு ஒருபோதும் வெற்றி கிடைக்க விட்டுவிடாதீர்கள். ஷய்த்தானுடைய இலக்கை செயலிழக்கச் செய்வதில் அவருக்கு உதவி

செய்யுங்கள். நல்லியல்பு கொண்டோர் நற்பேறு பெற்றவர்களின் உள்ளங்களில் நபி உடைய தூதுச் செய்தியையும் அல்லாஹ் அவருக்கு செய்துள்ள உதவிகளையும் பற்றி அறிமுகப்படுத்தி அவர்கள் உண்மையை தெரிந்து கொள்ள செய்து ஜமாஅத்தில் இணையச் செய்யுங்கள்.

பிறகு அம்மக்கள் ஊதப்பட்ட ரூஹின் காட்சியை காணட்டும். இறைவனது பரிமாற்றத்தின் காட்சியை காணட்டும். அவர்கள் தமது உலகம் மற்றும் மறுமையின் அருள்களைப் பெற்றவாறு ஜன்னத்தின் வாரிசாகட்டும். நபிமார்களின் தூதுச் செய்திகளை உலகில் பரப்புவதற்கு உதவியாளராகுங்கள். நல்லியல்பு கொண்ட மக்களின் உள்ளங்களில் ஒரு தூண்டுதல் உருவாக வேண்டும். எல்லா மலக்குகளும் நபிக்கு ஆதரவாக, **மலக்குகள் எல்லாரும் ஸஜ்தா செய்தனர் (38:74)** என்ற அறிவிப்பை செய்தனர். அதாவது எல்லாரும் அவருக்கு சிரம் பணியும் காட்சியைக் காட்டினர். அசாதாரண பரக்கத்துகள் நபிக்கு ஆதாரவாக தரப்படுகின்றன.

மலக்குகளிடமிருந்தும் ஸஜ்தாவின் காட்சி காட்டப்படுகிறது. அது கட்டுப்படுதல் என்ற ஸஜ்தாவாகும். அவர்கள் தமது அனைத்து ஆற்றல்களையும் நபியின் பணிகளை மேம்படுத்துவதற்காக பயன்படுத்தும் ஸஜ்தாவாகும்.

அவர்கள் நபிக்கு வலிமையான உதவியாளராக மாறுகின்றனர். இக்காலத்திலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய உண்மைப் பேரன்பருடனும் இதே நடைமுறையே நடந்து கொண்டிருக்கிறது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை அல்லாஹ் **ஆதம்** என்று அழைத்தான்.

**<u>ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:</u>**

நினைவில் கொள்ளுங்கள். இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்டவரை இழிவுபடுத்துவது இறைவனை இழிவுபடுத்துவதாகும். நீங்கள் வேண்டுமானால் ஏசுங்கள். அதற்கு உங்களுக்கு சுதந்திரம் உள்ளது. ஏனெனில் வானத்து ஆட்சி உங்கள் பார்வையில் மிகவும் அற்பமானது.

எனவே இன்று எதிர்ப்பவர்களும் இறைவனைத்தான் எதிர்க்கின்றனர்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய ஜமாஅத்துடன் எதிர்த்து நிற்கவில்லை.

**<u>ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:</u>**

நான் கலீஃபத்துல்லாஹ் ஆவேன் என்று கூறி தனது ஓர் இல்ஹாமை குறிப்பிடுகிறார்கள்.

நான் ஒரு கலீஃபாவை உருவாக்க விரும்பினேன். ஆதமை படைத்தேன். அவர் அல்லாஹ்வின் கலிமாவும் சுல்தானும் (வலிமையான சான்று) ஆவார்.

மேலும் அவர்கள் கூறுகின்றார்கள்: எமது கிலாஃபத் ஆன்மீகமானது. வானத்தைச் சார்ந்தது. பூமியைச் சார்ந்ததல்ல.

இந்த ஆதமுடைய தகுதியை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் தாசராக இருந்ததன் காரணத்தால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு வழங்கினான். இந்த தகுதியை வழங்கிய பிறகு ஆதமுக்கு ஸஜ்தா செய்யுங்கள் என்று கட்டளையிட்டான். இந்த சிறப்பான மனிதனுக்கு ஸஜ்தா செய்யுங்கள். அவரை மார்க்கத்தை பரப்புவதற்காக தேர்ந்தெடுத்துள்ளோம். அசாதாரணமான உதவிகள் அவருக்காக இறங்கத் தொடங்கின. ஒரே மனிதர் கோடிக்கணக்கானவர் ஆனார்.

இல்ஹாம் மூலமாக அன்னாருக்கு அல்லாஹ் ஆற்றல் அளித்தான். நான் உன்னுடன் இருக்கிறேன். எனது மலக்குகளும் உதவி செய்வதற்காக எப்போதும் உம்முடன் இருக்கின்றனர்.

இறைவன் அவர்களிடம் கூறினான்:

நான் எனது ரஸூலுடன் நிற்பேன். மலக்குகளும் அவருக்கு உதவி செய்வர்.

இறைவனது பழங்கதையல்ல. மாறாக, தனது வாக்குறுதிக்கேற்ப இறைவனின் உதவியின் காட்சியை நாம் இன்று வரை காண்கிறோம். ஷய்த்தானும் தனது வேலையை செய்து கொண்டிருக்கிறான். மலக்குகளும் தமது பணியைச் செய்து கொண்டிருக்கின்றனர். அல்லாஹ் தனது மலக்குகள் மூலமாக மக்களின் உள்ளங்களை திறக்கும் போது எல்லா தடைகளும் விலகுகின்றன. ஓரிடத்தில் அநீதியிழைக்கப்பட்டு ஜமாஅத் அமுக்கப்படும் போது இன்னோரிடத்தில் புதிய புதிய ஜமாஅத்துகள் உருவாகின்றன.

கடந்த சில நாட்களுக்கு முன் அல் ஃபஸ்ல் –ல் ஒரு சம்பவத்தைப் படித்தேன். நதீம் சாஹிப் அரபிகளைக் குறித்து அதில் ஒரு பக்கம் எழுதி வருகின்றார். இல்மி ஷாபி சாஹிப் அஹ்மதிய்யத்தை ஒப்புக் கொண்ட சம்பவம் அதில் எழுதப்பட்டிருந்தது. எவ்வாறு அல்லாஹ் அவரை அஹ்மதிய்யத்தின் பக்கம் ஈர்த்தான் என்று அதில் எழுதப்பட்டுள்ளது. முஸ்தஃபா ஸாபித் சாஹிப் என்ற அஹ்மதி இல்மி ஷாபி சாஹிபுடன் ஒரு கம்பெனியில் ஒன்றாக வேலை செய்தார். அவர் கூறுகிறார்: ஓர் இளைஞர் (முஸ்தஃபா ஸாபித் சாஹிப்) மற்றவர்களை விட்டு எப்போதும் தனித்து வாழ்ந்து வந்தார். அவர் பஹாயி ஆகவும் இருக்க முடியாது என்ற எண்ணம் வந்தது. பிறகு அவரது சில நடவடிக்கைகளை கவனித்தேன். பிறகு சிறிது சிறிதாக அவருடன் பழகினேன். இஸ்லாத்தின் கொள்கைகளையும் சான்றுகளையும் முஸ்தஃபா ஸாபித் சாஹிப் என்ற இளைஞர் எடுத்து வைத்தார். அவரது ஆதாரங்களுக்கு எதிராக என்னிடம் எந்த பதிலும் இல்லை.

உலமாக்களிடம் பதில் கேட்டேன். ஆனால் அதிலும் எனக்கு திருப்தி இல்லை. ஒரு சந்தர்ப்பத்தில் அங்கிருந்து வேலையை விட்டு விட்டு வரவேண்டியதாயிற்று. அவர் தனது நூல்களை என்னிடம் வழங்கி விட்டு சென்றார். இந்த நூல்கள் அனைத்தையும் நான் படிப்பேன் என்ற நிபந்தனையுடன் பெற்றுச் சென்றேன். திருக்குர்ஆனின் விளக்கவுரையாகிய Five Volume மற்றும் சில நூல்கள், இஸ்லாமிய போதனைகளின் தத்துவஞானம் எல்லாம் படித்தேன். ஒவ்வொரு நூலும் படித்த பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய ஒவ்வொரு நூலுக்கும் எதிரிகளாகிய ஆலிம்கள் தரப்பிலிருந்து செய்யப்பட்ட ஆட்சேபனைகளையும் தேடிப் படித்தேன். பாகிஸ்தானில் ஒவ்வொரு நூலையும் சான்று காட்டி காட்டி ஆட்சேபனை செய்வர். அவ்வாறு ஆட்சேபனை செய்பவர்களின் ஆட்சேபனையை கூர்ந்து கவனிக்கும் போது அவர்களின் குறைமதி வெளிப்படும். மேலும் சரியான நல்லியல்பைப் பின்பற்றுவதற்குப் பதில் ஷய்த்தானின் பின்னால் செல்பவர்கள் அவர்கள் என்பதும் புலப்படும். நான் உலமாக்களிடம் பல விஷயங்களைக் கேட்டும், எனது மனம் திருப்தி பெறாததால் தான் நான் இஸ்லாமிய போதனைகளின் தத்துவ ஞானம் என்ற நூலைப் படித்தேன். அது எனது உள்ளத்தை அசைத்தது. எனது தந்தைக்கும் அந்த நூலை வாசித்துக் காட்டினேன்.

இத்தகைய நூலை எழுதியவர் யாராக இருக்க முடியும்? நீங்களே கூறுங்கள் என்று எனது தந்தையிடம் கேட்டேன். என் தந்தை கூறினார். இந்த நூலை எழுதியவர் நிச்சயமாக ஒரு வலியுல்லாஹ் ஆவார்.

உடனே தந்தையிடம், இவர் தம்மை மஸீஹ் மவ்வூது என்று வாதித்துள்ளார் என்று நான் கூறினேன்.

தந்தையார் யோசிக்கத் தொடங்கினார். பிறகு, சரி தான் அவ்வாறு அவர் கூறியிருந்தால் ஆட்சேபிக்க முடியாது. மிகவும் இறை நெருக்கம் பெற்ற ஒருவர்தான் இந்த அளவு ஞானமிக்க ஒரு நூலை எழுத முடியும். ஆனால் நான் கிழவனாகிக் கொண்டிருக்கிறேன். நான் ஒப்புக் கொள்ள இயலாது என்றார்.

எவ்வாறிருப்பினும் இல்மி ஸாபித் சாஹிப் உள்ளத்தில் சிறிது சிறிதாக மாற்றம் ஏற்பட்டது. அவரிடம் நல்லியல்பு இருந்ததால் ஆட்சேபனைகளை தேடிப் பிடித்து படித்த நிலையிலும் உண்மையைக் கண்டறிய வாய்ப்பு கிடைத்தது. அவர் பைஅத் செய்து விட்டார். இவ்வாறு எண்ணற்ற சம்பவங்கள் உள்ளன. இக்காலத்திலும் நடக்கின்றன. சிலருக்கு அல்லாஹ் கனவுகள் மூலம் காட்டுகிறான். கனவுகள் மூலம் தூதுச்

செய்தியை கொண்டு சேர்க்கிறான். கனவு விஷயத்தில் எந்த மனிதக் கரமும் பின்னணியில் செயல்பட முடியாது. இவை அனைத்தும் மலக்குகளின் உதவி மூலம் நடக்கிறது. இறைவன் தனது தேர்ந்தெடுத்த அடியார்களுக்காக இதனை வெளிப்படுத்துகிறான். பிறகு சரியான தூய இயல்பு உள்ளவர்கள் நன்மையின் பக்கம் வருகின்றனர். ஆனால் மற்றொருபுறம் ஷைத்தானின் அடிச்சுவட்டைப் பின்பற்றிச் செல்பவர்கள் எதிர்ப்பில் முன்னேறிக் கொண்டே செல்கின்றனர். அவன் தனது பணியை செய்து கொண்டு செல்கிறான். தடையை ஏற்படுத்துகிறான். இவர்களின் பின்னால் தற்பெருமை வேலை செய்கிறது. இதனை இறைவன் அடையாளம் காட்டியுள்ளான். அவன் அவர்களை மலக்குகளின் கூட்டத்தை விட்டு வெளியேற்றி கிளர்ச்சி செய்யத் தூண்டுகிறான். தனக்குப் பின்னால் வருமாறு நிர்பந்தம் செய்கிறான். எனவே அல்லாஹ்வின் அடியார்கள் இறைவனின் பண்பை வெளிப்படுத்துபவர்களாகின்றனர். அவர்களுக்கு இறைவனுடன் தொடர்பு அதிகமாகிக் கொண்டே செல்கிறது. ஆன்மீக முன்னேற்றத்திலும் இவர்களின் வாதம் முன்னேற்றத்தின் பக்கமே செல்கிறது.

இவ்வாறு உலகியல் மற்றும் பௌதீக விஷயங்களிலும் இறைவனது தகுதியை கருத்தில் கொண்டு பணியாற்றுகின்றனர். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இதன் விளக்கத்தை ஓரிடத்தில் கூறுகின்றார்கள். அதனை உங்கள் முன் வைக்கிறேன்.

தற்பெருமை எத்தகைய ஒரு தொல்லை எனில் அது மனிதன் பின்னால் விட்டு செல்லாது. நினைவில் கொள்ளுங்கள். தற்பெருமை ஷைத்தானிடமிருந்து வருகிறது. தற்பெருமை கொண்டவரை ஷைத்தானாக்கி விடுகிறது. எதுவரை மனிதன் முற்றிலுமாக இதனை விட்டு விலகவில்லையோ அதுவரை உண்மையை ஒப்புக் கொள்வதன் இறையருளை ஒருபோதும் பெற இயலாது. அதாவது அல்லாஹ்வின் உண்மையின் தூதுச் செய்தியை அவர் ஒருபோதும் ஒப்புக் கொள்ளமாட்டார். இறையருளிலிருந்து பயனடையமாட்டார்.

இவை அனைத்தும் நபிமார்கள் மீது செய்யப்படுகின்ற எதிர்ப்பின் விளைவாகும். அவர்கள் எவ்வளவுதான் இபாதத் செய்தாலும் ஸஜ்தா செய்தாலும் அது அவர்களுக்கு எந்தப் பயனையும் தராது.

**<u>ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:</u>**

நீங்கள் என்னை எதிர்த்து எனது அழிவுக்காக துஆ செய்தவாறு ஸஜ்தா செய்து மூக்கை தேய்த்து விட்டாலும் உங்கள் மூக்குதான் உடையுமே தவிர எனக்கு எந்த அழிவும் ஏற்படாது.

பிறகு கூறுகிறார்கள்: இவர்களின் ஆணவம் வழியில் தடையாக நிற்கின்றது. எனவே எவ்வகையிலும் தற்பெருமை கூடாது. இல்மின் அடிப்படையிலோ, செல்வத்தின் அடிப்படையிலோ அல்லது குடும்பம், குலப்பெருமையினாலோ ஒருவருக்கு தற்பெருமை தோன்றினால் அதிலிருந்து அவர் தன்னை தூய்மைப்படுத்தாத வரை இறைவனது அன்பிற்குரிய இறை அடியாராக முடியாது. மன எழுச்சிகளை எரித்துவிடக் கூடிய இறைஞானம் கிடைக்க முடியாது. அவர்களது இல்ம் எல்லாம் வெறும் வாயளவினதாகவே இருக்கின்றது. இறைஞானம் கிடைக்கவே முடியாது.

கூறினார்கள்: ஷைத்தானும் இறுமாப்பினால் தன்னை ஆதம் (அலை) அவர்களை விட பெரியவனாகக் கருதினான். நான் அவரை விடச் சிறந்தவன். நீ என்னை நெருப்பினால் படைத்தாய். அவரை களிமண்ணினால் படைத்தாய் (7:13) என்று கூறினான்.

விளைவு இறை சன்னிதானத்திலிருந்து விலக்கப்பட்டான். எனவே ஒவ்வொருவரும் அதிலிருந்து தப்பிக்க வேண்டும். எதுவரை மனிதனுக்கு முழுமையான இறைஞானம் கிடைக்கவில்லையோ அதுவரை வீணான செயல்களை செய்கிறார். அதிலிருந்து எச்சரிக்கை பெறுவதில்லை. இறைஞானம் அவருக்கு கிடைத்து விட்டால் அவரிடத்தில் ஏதாவது வீண் செயல்கள் வெளிப்பட்டு விட்டால் கூட மன்னித்து விடுகிறான்.

எனவே நபிமார்களின் எதிரிகள் அல்லது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் எதிரிகளுக்கு அவர்களது தற்பெருமை அவர்களை இறைவனிடமிருந்து பாதுகாக்காது. மாறாக ஷய்த்தானின் பிடியில்தான் மாட்டிக் கொண்டே செல்கின்றனர்.

கூறினார்கள்: ஹஸ்ரத் ஆதம் (அலை) அவர்கள் தனது பலவீனத்தால் ஏற்பட்ட தவறுகளை ஒப்புக் கொண்டார்கள். இறை அருளின்றி எதுவும் நடக்காது என்று புரிந்து கொண்டார்கள். எனவே துஆ செய்தவாறு இறைவனது அருளுக்கு வாரிசானார்கள்.

எங்கள் இறைவா! நாங்கள் எங்கள் ஆன்மாவுக்கே அநீதியிழைத்துக் கொண்டோம். நீ எங்களை மன்னித்து எங்களுக்கு கருணை காட்டவில்லையென்றால் நிச்சயமாக நாங்கள் நஷ்டம் அடைந்தவர்களைச் சேர்ந்தவர்களாகி விடுவோம் (7:24)

அந்தோ பரிதாபம்! தம்மை முஸ்லிம் உம்மத் என்று கூறுபவர்களுக்கு இது புரிய வேண்டும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் வருகை குறித்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் செய்த முன்னறிவிப்பு நிறைவேறி அன்னாரை இறைவனின் உதவிகளுடன் இறக்கினான். எதிர்ப்பதற்குப் பதில் அவரை ஏற்றுக் கொள்ளுங்கள். கிளர்ச்சி சிந்தனை உள்ளவர்களின பின்னால் சென்று காலத்தின் இமாமுக்கு நஷ்டமிழைக்க முயற்சி செய்வதற்குப் பகரமாக அவரை ஏற்பதின் பக்கம் கவனம் செலுத்துங்கள்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்:**

இது இறைவனின் இயக்கமாக இல்லையெனில் எப்போதோ அழிந்து போயிருக்கும்.

ஆகவே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை எதிர்ப்பதை விடுத்து ஹஸ்ரத் ஆதம் (அலை) அவர்கள் செய்த துஆவின் பக்கம் கவனம் செலுத்துங்கள். தற்போது தொலைக்காட்சிகளில் காட்டப்படுவதை பார்த்திருப்பீர்கள். லாஹூரில் இரண்டு பள்ளிவாயில்களில் கடும் தாக்குதல் நடைபெற்றுள்ளது. குன்றி என்ற இடத்தில் ஆயுதங்கள் எடுக்கப்பட்டுள்ளன. இவ்வாறு உலகம் முழுவதிலும் மவ்லவிகளின் பின்னால் சென்றவாறு எதிர்ப்புகள் பல்வேறு பகுதிகளில் செய்யப்படுகின்றன. இந்த எதிர்ப்புகள் எல்லாம் அஹ்மதிய்யத்தை அழித்து விடுமா? இதற்கு முன் நடந்த தாக்குதல்களினால் அஹ்மதிய்யத் அழிந்து விட்டதா? ஒருபோதும் அவ்வாறு நடக்கவில்லை; நடக்கவும் முடியாது. **ஆம்! அவர்களுக்கு தான் இறைபிடியும் தண்டனையும் கிடைக்கக் காரணமாக அமையும்**.

நமக்கு போதனை செய்தவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

துஆ எத்தகைய பொருள் எனில் ஆதமுக்கும் ஷய்த்தானுக்கும் யுத்தம் நடந்த போது துஆவைத் தவிர வேறு எந்த ஆயுதமும் பயன் அளிக்கவில்லை. கடைசியில் ஹஸ்ரத் ஆதம் (அலை) அவர்கள் துஆவின் மூலம் வெற்றி பெற்றார்கள்.

**பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

எவ்வாறு துஆவின் மூலம் ஹஸ்ரத் ஆதம் (அலை) அவர்கள் ஷய்த்தானை எதிர்கொண்டார்களோ அவ்வாறே கடைசி காலத்திலும் துஆவின் மூலமே இறைவன் வெற்றியைத் தருவான்; ஆயுதத்தால் அல்ல.

முதல் ஆதமுக்கு ஷய்த்தானிடமிருந்து வெற்றி துஆவின் மூலமே கிடைத்தது. எங்கள் இறைவா! நாங்கள் எங்கள் ஆன்மாவுக்கே அநீதியிழைத்துக் கொண்டோம். நீ எங்களை மன்னித்து எங்களுக்கு கருணை காட்டவில்லையென்றால் நிச்சயமாக நாங்கள் நஷ்டம் அடைந்தவர்களைச் சேர்ந்தவர்களாகி விடுவோம் (7:24) என்று துஆ செய்தார்கள்.

அதேபோன்று இந்த இரண்டாவது ஆதம் (ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது) அலைஹிஸ்ஸலாம் அவர்களையும் அல்லாஹ் ஆதம் என்று இல்ஹாமின் மூலம் கூறியுள்ளான். ஷய்த்தானுடன் இறுதி சண்டையிடுகிறார். அப்போதும் துஆவின் மூலமே வெற்றி கிடைக்கும். பகைமை இப்போது வளர்ந்து வளர்ந்து சில இடங்களில் பல மடங்கு அதிகமாகி விட்டது. சாதாரண வளர்ச்சி அல்ல. பகைமை அதிமாகிக் கொண்டே செல்கிறது. நாம் துஆவில் அதிகம் கவனம் செலுத்த வேண்டும். அல்லாஹ்வின் அருளால் இந்த எல்லா எதிர்ப்புகளுக்கு மத்தியிலும் ஜமாஅத் வளர்ந்து கொண்டே தான் செல்கிறது. அனைத்து தடைகளுக்கும் மத்தியிலும் ஒவ்வொரு வழியிலும் ஷய்த்தான் உட்கார்ந்திருக்கும் நிலையில் ஜமாஅத் வளர்ந்து கொண்டுதான் இருக்கிறது. நல்லியல்பு கொண்ட மக்களின் இயல்பு மூலமாக மலக்குகளும் பணி செய்கின்றனர். இவ்வாறு நல்லியல்பு கொண்ட மக்கள் ஜமாஅத்தில் இணைகின்றனர்.

சூரா அஃராஃப் என்ற திருக்குர்ஆனின் ஒரு சூராவில் அல்லாஹ், **எங்கள் இறைவா! நாங்கள் எங்கள் ஆன்மாவுக்கே அநீதியிழைத்துக் கொண்டோம். நீ எங்களை மன்னித்து எங்களுக்கு கருணை காட்டவில்லையென்றால் நிச்சயமாக நாங்கள் நஷ்டம் அடைந்தவர்களைச் சேர்ந்தவர்களாகி விடுவோம் (7:24)** என்ற துஆவைக் கற்றுத் தந்துள்ளான்.

அல்லாஹ்வின் நெருக்கம் அதிகமாக அதிகமாக அவனது அருளை ஈர்ப்பதற்கும், ஷய்த்தானுடைய ஒவ்வொரு தாக்குதல்களிலிருந்தும் தப்பிப்பதற்கும், துஆவின் பக்கமும், நமது சீர்திருத்தத்தின் பக்கமும், நாம் தனிப்பட்ட முறையிலும் ஜமாஅத் அளவிலும் கவனம் செலுத்த வேண்டும்.

அதேபோன்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இதனை தெளிவுபடுத்தியவாறு கூறுகின்றார்கள்:

ஆதமைப் படைக்கும் போது அல்லாஹ்வின் ஞானம் அவரிடத்தில் இருவித தொடர்பை ஏற்படுத்தியுள்ளது. இதனைப் பற்றி திருக்குர்ஆனில் இறைவன் கூறுகிறான்:

நாம் அவனை முழுமையாக்கி எனது ஆவியை அவனுள் ஊதினால் நீங்கள் எல்லாரும் அவனுடம் சிரம் பணிந்து விடுங்கள். (15:30)

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

அல்லாஹ் ஆதமைப் படைத்ததுடன் தனது ரூஹை ஊதி அவருக்கு தன்னுடன் ஒரு தொடர்பை ஏற்படுத்தி விட்டான். மனிதனுக்கு இயல்பாகவே இறைவனுடன் ஒரு தொடர்பு ஏற்பட வேண்டும் என்பதற்காக இறைவன் அவ்வாறு செய்தான். மேலும் இன்னொரு புறம் மனித குலத்துடன் இயல்பாகவே ஒரு தொடர்பு ஏற்பட வேண்டும். ஏனெனில் மனிதன் ஆதமின் எலும்புகளில் ஒரு எலும்பாகவும் சதையின் ஒரு சதையாகவுமே இருப்பான். எனவே ஆதமுக்கு ஊதப்பட்ட அந்த ரூஹிலிருந்து அவன் கண்டிப்பாக பயன் பெறுவான்.

இதுவே நமது பொறுப்பாகும். அல்லாஹ்வுடைய தொடர்பில் நாம் முன்னேற வேண்டும். நமது தொடர்பு சரியாக இருந்தால் ஆதமுடைய அந்த இயல்பு நமது சிறப்பு இயல்பாகவும் ஆகிவிடும். இவ்வாறு அடியார்களுக்கு செய்ய வேண்டிய கடமைகளின் மீதும் கவனம் ஏற்படும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கொண்டு வந்த இந்த மிஷனை மேலே கொண்டு செல்லுங்கள். ஆனால் ஷய்த்தானின் சீடர்களால் நரகத்தை நிரப்புவேன் என்று கூறியுள்ளான்.

நான் ஏற்கனவே கூறியது போன்று எதிர்ப்புப் புயல் பலமாக வீசுகிறது. லாஹூரில் ஒரு மஸ்ஜிதில் தாக்குதல் நடந்துள்ளது. அழிவுகள் பற்றிய முழு விபரம் தெரியவில்லை. ஆனால் கணிசமான ஷஹாதத் நடந்துள்ளது. பலர் படுகாயமுற்றுள்ளனர். பலரின் நிலை மிகவும் Critical ஆக உள்ளது. தாருஸ் ஸிக்ரின்

நிலை இன்னும் தெளிவாக தெரியவில்லை. ஜுமுஆவுக்கு வந்த மக்களில் எவ்வளவு பேர் இறந்தார்கள் என்று தெரியவில்லை. விபரம் வரும் போது தெரியவரும். ஆனால் கணிசமான எண்ணிக்கையில் ஷஹாதத்துகள் நடந்துள்ளன. அல்லாஹ் இந்த எல்லா ஷஹீதுகளின் தகுதிகளையும் உயர்த்துவானாக. படுகாயமடைந்தவர்கள் நலம் பெற துஆ செய்யுங்கள். பலர் அதில் உயிருக்கு ஆபத்தான நிலையில் உள்ளனர். இவ்வாறு ஒட்டுமொத்த நஷ்டம் விளைவிக்க எதிரிகள் முயன்றுள்ளார்கள். இறைவன் நிச்சயமாக இதற்கு பதிலடி கொடுக்க சக்தி படைத்தவன்! எவ்வாறு அவன் தனது வல்லமையின் கரத்தை காட்டப் போகிறான்? எவ்வாறு இந்த அநீதியிழைப்பவர்களை பிடிக்கப் போகிறான் என்பதை அவனே நன்கறிவான். ஆனால் இறைவனது ரோஷத்தை மீண்டும் மீண்டும் இம்மக்கள் தூண்டுகின்றனர். அநீதியில் முன்னேறிக் கொண்டே செல்கின்றனர். **அல்லாஹ் இவர்களை படிப்பினைக்குரிய அடையாளமாக ஆக்குவானாக.**

**இன்ஷா அல்லாஹ் இது நடக்கும்!**

நான் ஏற்கனவே கூறியது போன்று அஹ்மதிகள் தமது துஆவில் அதிகமான வேதனையைக் காட்டுங்கள்.

**அல்லாஹ் இவர்களின் ஆணவம், பிடிவாதம், பெருமை, ஆற்றல் அனைத்தையும் தனது வல்லமையின் ஒளியால் மண்ணோடு மண்ணாக்குவானாக!**

அல்லாஹ் அஹ்மதிகளின் ஈமானை வளரச் செய்வானாக! இந்த சோதனை நமது ஈமானை பலவீனப்படுத்தக் காரணமாக ஒருபோதும் ஆகிவிடக் கூடாது.

முழு உலக அஹ்மதிகளும் பாகிஸ்தான் அஹ்மதிகளுக்காக இந்நிலையில் துஆ செய்யுங்கள். கடும் சிரமமான நிலை அங்கு ஏற்பட்டுள்ளது. அது போன்று எகிப்தில் உள்ள கைதிகளுக்காகவும் துஆ செய்யுங்கள். அல்லாஹ் அவர்களை விடுவிக்கும் ஏற்பாட்டை செய்வானாக.

இந்தியாவில் கேரளாவில் கடந்த சில நாட்களுக்கு முன் தவறான பழி சுமத்தி 2-3 அஹ்மதிகள் கைது செய்துள்ளார்கள். அவர்களையும் துஆவில் நினைவு கூறுங்கள்.

அல்லாஹ்வின் வாக்குறுதிக்கேற்ப இந்த கைதிகள், காயமுற்றோர், ஷஹீதுகளின் தியாகங்கள் ஒருபோதும் வீணாகாது. ஷய்த்தானின் சீடர்கள் ஒருபோதும் வெற்றிபெற மாட்டார்கள். அல்லாஹ் நம் மீதும் கருணை காட்டுவானாக. வருங்காலத்தில் ஒவ்வொரு சோதனையிலிருந்தும் தாக்குதல்களிலிருந்தும் பாதுகாப்பாக வைப்பானாக.

★ ★ ★ ★ ★

JUMUA KUTHBA
HADHRAT KHALIFATUL MASIH V
AT BAITUL FUTUH MOSQUE, LONDON
ON 28.05.2010

Translated by : Muallim M. NIZAMUDEEN
Published by : MAJLIS KHUDDAMUL AHMADIYYA
ASHURA EAST STREET,
MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
TELEFAX : 0462 - 2352456